**ஜனவரி – 20**

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி விருதுகள்

- 2019 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி விருதுகள் அறிவிக்கப் பட்டுள்ளன.
- அதில் சிகாகோ தமிழ்ச் சங்கத்துக்கு 2019 ஆம் ஆண்டுக்கான தமிழ்த்தாய் விருது அறிவிக்கப் பட்டுள்ளது.
- மற்ற விருதுகள்
    - கபிலர் விருது - புலவர் வெற்றியழகன்,
    - உ.வே.சா.விருது - வே.மகாதேவன்,
    - கம்பர் விருது - சரசுவதி ராமநாதன்,
    - சொல்லின் செல்வர் விருது - கவிதாசன்,
    - ஜி.யு.போப் விருது – மரிய ஜோசப் சேவியர்,
    - இளங்கோவடிகள் விருது - கவிக்கோ ஞானச்செல்வன் (எ) திருஞானசம்பந்தம்,
    - உமறுப்புலவர் விருது - லியாகத் அலிகான்,
    - அம்மா இலக்கிய விருது - உமையாள் முத்து,
    - சிங்காரவேலர் விருது - அசோகா சுப்பிரமணியன்,
    - மறைமலையடிகளார் விருது - புலவர் முத்துக்குமாரசாமி,
    - அயோத்திதாசப் பண்டிதர் விருது - புலவர் பிரபாகரன்,
    - சிறந்த மொழி பெயர்ப்பாளர் விருதுகள் - முகமது யூசுப், மஸ்தான் அலி, பேராசிரியர். சிவ. முருகேசன்,
    - 2018 ஆம் ஆண்டுக்கான முதலமைச்சரின் கணினித் தமிழ் விருது முனைவர் நாகராசன்

# தேசியச் செய்திகள்

## நீர்த் துறைகள் மீதான தரவரிசை

- சமீபத்தில் மத்திய ஜல் சக்தித் துறை அமைச்சகமானது மத்திய மற்றும் மாநில அரசுகளின் நீர்த் துறைகளின் தரவரிசைகளை அந்தத் துறைகளின் செயல்திறன் இலக்குகளின் அடிப்படையில் வெளியிட்டுள்ளது.
- இது அனைத்து மாநிலங்களிலும் நீர்வளத் தகவல் அமைப்பை (WRIS - Water Resource Information System) உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த அறிக்கையின் படி, தரவரிசையில் குஜராத் முதலிடத்திலும் தில்லி கடைசி இடத்திலும் உள்ளன.
- இந்தத் தரவரிசையில் ஏழு மத்திய அரசுத் துறைகளிடையே, இந்தியக் கள ஆய்வு நிறுவனம் முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்து இந்தத் தரவரிசையில் தேசிய நீரியல் நிறுவனம் மற்றும் மத்திய நீர் ஆணையம் ஆகியவை உள்ளன.
- இந்தத் தரவரிசையில் மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மிகக் குறைந்த தரவரிசையைப் பெற்றுள்ளது.

- இந்தத் தரவரிசையில் அனைத்து மாநிலங்களுக்கிடையே தமிழகம் சிறப்பான செயல்பாடு கொண்ட மாநிலமாக தேர்ந்தேடுக்கப் பட்டுள்ளது.
- தமிழ்நாடு மாநிலம் 2018 ஆம் ஆண்டில் இந்தத் தரவரிசையில் 33வது இடத்தில் இருந்தது. இது தற்பொழுது 13வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

## கேரளா மற்றும் குடியுரிமை (திருத்தம்) சட்டம்

- குடியுரிமை (திருத்தம்) சட்டத்திற்கு (Citizenship Amendment Act - CAA) எதிராக உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்வதற்காக 131வது சரத்தை கேரள மாநில அரசு பயன்படுத்தியுள்ளது.
- இந்திய அரசியலமைப்பின் சரத்து 14, சரத்து 21 மற்றும் சரத்து 25 ஆகியவற்றை மீறுவதாகக் கூறி CAA ஐ எதிர்த்து உச்ச நீதிமன்றத்தை நாடிய முதலாவது மாநிலமாக கேரளா உருவெடுத்துள்ளது.
- சரத்து 131 ஆனது அசல் அதிகார வரம்பு என அழைக்கப் படுகின்றது. இந்தச் சரத்தின் கீழ், மாநிலங்களுக்கிடையில் அல்லது மத்திய அரசிற்கும் மாநிலத்திற்கும் இடையில் எழும் எந்தவொரு பிரச்சினைகளைக் களைவதிலும் உச்ச நீதிமன்றத்திற்கு அசல் அதிகார வரம்பு உள்ளது.
- இந்தச் சரத்தானது கீழ் நீதிமன்றத்தின் மூலமாக அல்லது கீழ் நீதிமன்றத்தின் தீர்ப்பை மறுபரிசீலனை செய்வதற்குப் பதிலாக இது போன்ற வழக்குகளை நேரடியாக எடுத்து விசாரிக்க உச்ச நீதிமன்றத்தை அனுமதிக்கின்றது.
- CAA சட்டத்திற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் பல மனுக்கள் தாக்கல் செய்யப் பட்டுள்ளன.
- உச்ச நீதிமன்றம் இந்த மனுக்களை தனித்தனியாக விசாரிக்கலாம் அல்லது அவற்றை ஒன்றாக இணைக்கலாம். ஆனால் கேரள அரசாங்கத்தின் மனுவை மட்டும் அந்த மனுக்களுடன் இணைக்க முடியாது.

## பஞ்சாப் மற்றும் குடியுரிமை (திருத்தம்) சட்டம்

- கேரளாவிற்குப் பிறகு, பஞ்சாப் சட்டமன்றமானது CAA அல்லது குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிராக தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.
- சர்ச்சைக்குரிய இந்தச் சட்டத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் முறையீடு செய்வதற்கு மாநில சட்டமன்றங்களையும் நீதித் துறையையும் பயன்படுத்தும் எதிர்க்கட்சிகளின் முயற்சியை இது எடுத்துக் காட்டுகின்றது.

## போலியோ சொட்டு மருந்து திட்டம் 2020

- ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்துகளை வழங்கியதன் மூலம் 2020 ஆம் ஆண்டின் போலியோ சொட்டு மருந்து திட்டம் இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த்தால் தொடங்கி வைக்கப் பட்டது.
- 2012 ஆம் ஆண்டில் இந்தியா போலியோவை முற்றிலுமாக ஒழித்தது.
- 2015 ஆம் ஆண்டில், இந்தியா போலியோ இல்லாத நாடாக அறிவிக்கப் பட்டது.
- இருப்பினும், ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் போலியோ நோய் அதிகரித்து வருவதால், 2020 ஆம் ஆண்டில் மேலும் ஒரு தேசிய நோய்த் தடுப்புத் தினத்தை நடத்த இந்திய அரசு முடிவு செய்துள்ளது.
- இந்தியாவில் கடைசியாக 2011 ஆம் ஆண்டில் மேற்கு வங்காளத்தின் ஹவுராவில்

போலியோ நோய் பதிவாகியுள்ளது.

- இந்தியா 2016 ஆம் ஆண்டு ஜனவரி 13 அன்று "போலியோ இல்லாத நாடாக" முழு 5 ஆண்டுகளையும் நிறைவு செய்தது.
- வேலூர் (தமிழ்நாடு) நகரமானது உத்திசார் திட்டத்தின் மூலம் 100% போலியோ இல்லாத முதலாவது இந்திய நகரமாக உருவெடுத்துள்ளது. மேலும் இந்தியாவின் பிற பகுதிகள் 1995 ஆம் ஆண்டில் இந்த உத்திசார் திட்டத்தை ஏற்றுக் கொண்டன.
- கடந்த 16 ஆண்டுகளாக தமிழக மாநிலமானது போலியோ அற்ற மாநிலமாக இருந்து வருகின்றது.

***IPV மற்றும் OPV என்றால் என்ன?***

- நாட்டில் இரண்டு வகையான போலியோ தடுப்பூசிகள் வழங்கப் படுகின்றன.
- இதில் IPV (Inactivated Polio Vaccine – வீரியம் அழிக்கப்பட்ட போலியோ தடுப்பூசி) மற்றும் OPV (Oral Polio Vaccine - வாய்வழி போலியோ தடுப்பூசி) ஆகியவை அடங்கும்.
- IPV என்பது மற்ற தடுப்பூசிக் கலவைகளுடன் இணைந்து வழங்கப்படும் ஒரு கொடிய வகைக்கான போலியோ வைரஸ் தடுப்பூசி ஆகும்.
- இதில் டிப்தீரியா, தொடர் இருமல், வாய்ப்பூட்டு நோய், ஹீமோபிலஸ், கல்லீரல் அழற்சி பி வகை மற்றும் சளிக் காய்ச்சல் ஆகியவை அடங்கும்.
- OPV ஐ விட IPV மிகவும் திறனுள்ளதாகும்.
- இது ஏற்கனவே OPV மூலம் நோய்த் தடுப்பு மருந்து வழங்கப்பட்ட குழந்தைகளிடையே குடல் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கின்றது.
- இந்தியாவிற்குள் வைரஸ் உள்நுழைவதைத் தடுப்பதற்காக, ஆப்கானிஸ்தான், நைஜீரியா, பாகிஸ்தான், எத்தியோப்பியா, கென்யா, சோமாலியா, சிரியா மற்றும் கேமரூன் போன்ற போலியோ பாதிப்புக்குள்ளான நாடுகள் மற்றும் இந்தியா ஆகியவற்றிற்கு இடையே பயணிப்பவர்களுக்கு வாய்வழி போலியோ தடுப்பூசி வழங்குவதை இந்திய அரசாங்கம் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் கட்டாயம் ஆக்கியுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## லிபியா அமைதி மாநாடு

- லிபியா அமைதி மாநாடானது சமீபத்தில் ஜெர்மனியில் பெர்லினில் நடத்தப்பட்டது.
- லிபியாவில் அமைதி திரும்புவதற்கான ஒரு அமைதித் தீர்மானத்திற்காக முக்கியமான நாடுகள் "முழு உறுதியுடன்" இருப்பதாக ஐ.நா பொதுச் செயலாளர் அண்டோனியோ குட்டரெஸ் கூறியுள்ளார்.
- ஜெர்மன் பிரதமரான ஏஞ்சலா மெர்க்கல்லுடன் ரஷ்யாவின் அதிபர் விளாடிமிர் புடின், துருக்கிய அதிபர் ரெசெப் தயிப் எர்டோகன், பிரெஞ்சு அதிபர் இமானுவேல் மெக்ரான் மற்றும் இங்கிலாந்துப் பிரதமர் போரிஸ் ஜான்சன் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.
- ஐக்கிய அரபு அமீரகம், எகிப்து, அல்ஜீரியா, சீனா மற்றும் காங்கோ குடியரசு ஆகியவை இந்த மாநாட்டிற்கு அழைக்கப்பட்ட பிற நாடுகளாகும்.
- ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம், ஆப்பிரிக்க ஒன்றியம் மற்றும் அரபு நாடுகள் குழு ஆகிய அமைப்புகளைச் சேர்ந்த தலைவர்களும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.
- லிபிய அமைதி முன்னெடுப்புகள் என்பது இரண்டாவது லிபிய உள்நாட்டுப் போரை

முடிவுக்குக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்ட கூட்டங்கள், ஒப்பந்தங்கள் மற்றும் நடவடிக்கைகள் ஆகியவை அடங்கிய ஒரு தொடர் ஆகும்.



# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## கே 4 ஏவுகணை

- நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து ஏவக்கூடிய 3,500 கிலோமீட்டர் தூர வரம்புள்ள அணுசக்தித் திறன் கொண்ட ஒரு ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாகச் சோதனை செய்துள்ளது.
- இந்தச் சோதனையானது ஆந்திராவின் விசாகப் பட்டினக் கடற்கரையில் இருந்து நடத்தப் பட்டது.
- இந்தச் சோதனையின் மூலம், ஐஎன்எஸ் அரிஹந்த் என்ற நீர்மூழ்கி அணுசக்தி வகைக் கப்பல்களின் வகுப்பில் இந்த கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை சேர்ப்பதில் இந்தியா மேலும் ஒரு படி முன்னேறியுள்ளது.
- இந்த ஏவுகணையானது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பால் உருவாக்கப் பட்டுள்ளது.
- இது ஒரு டன்னுக்கு மேல் எடையுள்ள அணு ஆயுதத்தை கொண்டுச் செல்லும் திறன் கொண்டது.
- அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் மட்டுமே 3,500 கிலோமீட்டர் தூர வரம்பு கொண்ட நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து ஏவப்படும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளைக் கொண்டு உள்ளன.
- நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து ஏவப்படும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையானது காற்று, நிலம் மற்றும் கடல் ஆகிய மூன்றின் அணு ஆயுதத் தளங்களுக்கும் மிக முக்கியமானப் பகுதியாக விளங்குகின்றது. இது இந்தியாவின் திருப்பித் தாக்கும் போர்த் திறனின் முன்னோடியாக விளங்குகின்றது.




## யாதா யாதா வைரஸ்


- ஆஸ்திரேலியக் கொசுக்களில் கண்டறியப்பட்ட புதிய வைரசிற்குத் தற்காலிகமாக யாதா யாதா வைரஸ் (YYV - Yada Yada virus) என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இது வைரஸ் குழுவைச் சேர்ந்த ஒரு ஆல்பா வைரஸ் ஆகும். சிறிய, ஒற்றையான தனிமைப்படுத்தப்பட்ட நேர்மறை உணர்வுள்ள ஆர்என்ஏ வைரஸ்கள் இவை என்று ஆராய்ச்சியாளர்கள் இந்த வைரஸினை விவரித்துள்ளனர்.
- மனித மற்றும் விலங்குகளின் ஆரோக்கியத்திற்குத் தீங்கு விளைவிக்கும் முக்கியமான உயிரினங்களான சிக்குன்குனியா வைரஸ் மற்றும் ஈஸ்டர்ன் எகுயன் மூளை அழற்சி வைரஸ் ஆகியவையும் இதில் அடங்கும்.
- இவை கொசுக்களால் முக்கியமாகப் பரவுகின்றன. இவற்றின் முதுகெலும்புகளில் நோய்க் கிருமிகள் இருக்கின்றன.
- வேறு சில ஆல்பா வைரஸ்களைப் போலல்லாமல், யாதா யாதா வைரஸானது மனிதர்களுக்கு அச்சுறுத்தலாக இல்லை.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## சுனி கோஸ்வாமி

- 1962 ஆம் ஆண்டு பாங்காக்கில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கத்தை வெல்வதற்காக இந்திய அணிக்குத் தலைமை தாங்கிய இந்தியக் கால்பந்து வீரரான சுனி கோஸ்வாமி இந்தியத் தபால் துறையால் கௌரவிக்கப் பட்டார்.
- மறைந்த கோஸ்டோ பால் (1998), மற்றும் மறைந்த டாக்டர் தாலிமீரன் ஓ (2018) ஆகியோருக்குப் பிறகு ஒருவருடைய பெயரில் அஞ்சல் முத்திரை வெளியிடப்படும் மூன்றாவது இந்தியக் கால்பந்து வீரர் இவராவார்.
- அர்ஜுனா விருதுடன் மதிப்புமிக்க பத்மஸ்ரீ விருதைப் பெற்ற ஆறு இந்தியக் கால்பந்து

வீரர்களில் இவரும் ஒருவர் ஆவார் (மற்றவர்கள் மறைந்த கோட்சோ பால், மறைந்த சைலன் மன்னா, பி.கே. பானர்ஜி, பாய்ச்சங் பூட்டியா, மற்றும் சுனில் சேத்ரி).



# முக்கிய தினங்கள்

## தேசிய நோய்த் தடுப்புத் தினம் - ஜனவரி 19

- இது 2020 ஆம் ஆண்டின் போலியோ சொட்டு மருந்துத் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்தியா முழுவதும் அனுசரிக்கப்பட்டது.
- ‘போலியோ அற்ற’ நிலையை தொடர்ந்திடும் நோக்கத்துடன் இந்தத் தினமானது அனுசரிக்கப் பட்டது.
- தேசிய நோய்த் தடுப்புத் தினத்தின் அடுத்த சுற்றானது மார்ச் 10 ஆம் தேதி அனுசரிக்கப்பட இருக்கின்றது.

*இத்தினம் பற்றி*

- போலியோவை முற்றிலுமாக ஒழிப்பதற்காக உலக சுகாதார நிறுவனத்தினால் பரிந்துரைக்கப்பட்ட நான்கு உத்திகளில் தேசிய நோய்த் தடுப்புத் தினமும் ஒன்றாகும்.
- உலக சுகாதார அமைப்பின் கூற்றுப் படி, தேசிய நோய்த் தடுப்புத் தினமானது ஆண்டுக்கு இரண்டு முறை 2 முதல் 4 வார கால இடைவெளியில் அனுசரிக்கப்பட வேண்டும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★